### ஜம்மு – காஷ்மீர் முதலமைச்சர் பதவி ஏற்பு

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அழைப்பு!

## தி.மு.க. சார்பில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்கிறார்!

சென்னை, அக்.16–

ஓமர் அப்துல்லா அவர்களின் பதவி யேற்பு விழாவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, தொலைபேசி வாயிலாக ஜம்மு – காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவர் ஃபரூக் அப்துல்லா அவர்கள் அழைத்துள்ளார்.

தமிழ்நாட்டில் கடும் மழை காரணமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்க இயலாத நிலையில் தி.மு.க. சார்பில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்கிறார்.

இதுகுறித்து வெளியான செய்தி வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, ஜம்மு – காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவர் ஃபரூக் அப்துல்லா அவர்கள் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு, ஓமர் அப்துல்லா அவர்களின் பதவியேற்பு விழாவுக்கு அழைப்பு விடுத்தார்.

வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 'ரெட் அலர்ட்' விடுக்கப்பட்டு, முன்னெச்சரிக்கைப் பணிகளில் ஈடுபட்டுள்ளதால், அவ்விழாவில் நேரில் கலந்து கொள்ள இயலாது என்று அவரிடம் தெரிவித்த முதலமைச்சர் அவர்கள், தி.மு.க. சார்பில் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்வார் என்று தெரிவித்துள்ளார்.

### சிவகங்கை மாவட்டத்தின் நிவாரணப் பணிகளுக்காக சுழற்சி முறையில் பணியாளர்கள் உள்ளனர்!

# வீண் வதந்திகளைப் பரப்பி வெற்று விளம்பரம் தேடுவதா?

## நாம் தமிழர்கட்சி சீமானுக்கு டி.கே.எஸ்.இளங்கோவன் கேள்வி!

**சென்னை, அக்.16–**

**திராவிட மாடல் அரசின் நிர்வாகத்தை ஒன்றிய அரசின் நிறுவனங்களே பலமுறை ஆய்வறிக்கைகளை வெளியிட்டு பாராட்டியுள்ளது.**

**இது நாம் தமிழர் கட்சி சீமான் அவர்களுக்கே தெரியும். அரசு எப்பொழுதும் விழிப்புடனும் விரைவுடனும் செயல்பட்டு மக்களைப் பாதுகாக்கும் சிவகங்கை மாவட்டம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் அமைச்சர் பெருமக்கள், ஐ.ஏ.எஸ்.அதிகாரிகள் கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு நிவாரணப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளது என்று திராவிட முன்னேற்றக் கழக செய்தித் தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன் அறிக்கை ஒன்றில் பதிலடி கொடுத்துள்ளார்.**



அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முழுவதிலும் பரவலாக பெரும் மழை பெய்து வருகிறது. சென்னை மாநகரிலும் நேற்று முதல் மழை விட்டுவிட்டு பெய்கிறது. வானிலை ஆராய்ச்சியாளர்களின் அறிவுரைகளின்படி பெரும் மழையை எதிர்பார்த்து அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அமைச்சர்கள், தலைமைச் செயலாளர், துறைச் செயலாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளின் அதிகாரிகள் பங்குபெற்ற ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும், காவல்துறையினருக்கும் உரிய அறிவுரைகளை வழங்கியுள்ளார்கள்.

அதுபோலவே துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் சென்னை மாநகராட்சி அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி, மாநகரில் வெள்ளத்தடுப்புப் பணிகளை மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கியுள்ளார்கள்.

அனைத்து மாவட்ட நிர்வாகங்களும் விழிப்புடன் செயல்பட்டு மழை வெள்ளத்தால் மக்கள் பாதிக்கப்படாமல் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென முதலமைச்சர் அவர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**மக்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர்**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அதிகாரிகளுக்கும் கடந்த காலங்களை நினைவில் கொண்டு விழிப்புடன் செயல்படுமாறும் அறிவுறுத்தப்பட்டு, அனைத்து நிலையிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில், வழக்கத்திற்கு மாறாக கோவை, மதுரை, சிவகங்கை, காரைக்குடி, விருதுநகர், புதுக்கோட்டை கரூர் உள்ளிட்ட மாநகரங்களில் தொடர்ந்து கடுமையான அளவில் மழை பெய்து ஆங்காங்கே போக்குவரத்துகளுக்கு இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளது. எனினும் அந்தந்த மாவட்ட நிர்வாகங்கள் உடனடியாக தேவைப்படும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு மக்களை பாதுகாத்து வருகின்றனர்.

இந்நிலையில், நாம் தமிழர் கட்சியின் சார்பில் சீமான், திராவிட மாடல் அரசின் நிர்வாகத் தோல்விக் காரணமாக மக்கள் சிரமப்படுகிறார்கள் என்று ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். இந்த அரசு 2021 மே திங்கள் 7ஆம் நாள் பதவியேற்றது முதல் ஓய்வின்றி தொடர்ந்து விழிப்புடன் அனைத்து வகையிலும் செயல்பட்டு வருவதன் காரணமாக இந்தியாவில் சிறந்த மாநிலம், சிறந்த நிர்வாக அமைப்புள்ள மாநிலம், சிறந்த முறையில்நிர்வகிக்கப்படும் மாநிலம் என்றெல்லாம் ஒன்றிய அரசின் அமைப்புகளே பலமுறை பாராட்டியுள்ளதை திருவாளர் சீமான் அவர்களுக்கே தெரியும். எனவே, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக திராவிட மாடல் அரசின் நிர்வாகத்தை குறை கூறுவது ஏற்புடையதல்ல.

மழை வெள்ள பாதிப்புகளிலிருந்து தமிழ்நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வோடு, தமிழ்நாடு முழுவதிலும், வடிகால்களும், வாய்க்கால்களும், நீர்வழிப்பாதைகளும், தூர் வாரப்பட்டுள்ளன.

பருவகாலத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் கனமழை பெய்வதன் காரணமாக ஏற்படும் பாதிப்புகளை களைவதற்காக மாவட்ட நிர்வாகமும் அரசும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பாதிக்கப்படும் பகுதிகளில் உடனுக்குடன் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளப்படுகின்றன.

**தகவலின் அடிப்படையில் உடனடி நடவடிக்கை!**

சென்னை மாநகரில் மட்டுமல்லாமல், அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், பேரிடர் மேலாண்மை கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டு அங்கு வரும் தகவல்கள் அடிப்படையில், உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது வழக்கமாகும்.

சிவகங்கை பேரிடர் மேலாண்மை கட்டுப்பாட்டு அறையில் அவசர அழைப்புகளை ஏற்க பணியாளர் இல்லையென பொதுமக்கள் வேதனைப்படுவதாக சீமான் தெரிவித்துள்ளார். இது தவறான குற்றச்சாட்டாகும். அங்கே பணியாளர்கள் சுழற்சி முறையில், 24 மணி நேரமும் பணியாற்றி வருகிறார்கள் என்பது தான் உண்மையாகும். சிவகங்கை மாவட்ட நிர்வாகத்தில் பேரிடர்கால அவசர உதவிக்கு 1077 என்ற TollL Free எண் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துடன் மாவட்ட நிர்வாகம் சார்பாக 04575246233 என்ற எண்ணுடன் வாட்ஸ் அப் எண் 8903331077 என்ற எண்ணும் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இந்த எண்களில் எதாவது ஒன்றை தொடர்பு கொண்டு தங்கள் பாதிப்புகளை தெரிவிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், பேரிடர் மேலாண்மை அலுவலகத்தில் ஆளில்லை என்று பொதுப்படையாக குற்றச்சாட்டைக் கூறுவது உண்மைக்குமாறானதாகும். அரசு எந்திரம் ஒரு நொடி கூட ஓய்வில்லாமல் மக்களைப் பாதுகாக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபடும். இதில் யாருக்கும் அய்யம் தேவையில்லை. எனவே, அவசர மழை வெள்ளக் காலங்களில் அரசுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிட அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டியது அவசியமாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, அரசின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு அளித்ததுடன், திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் அதன் நிர்வாகிகள் மாநிலம் முழுவதும் உடனுக்குடன் செயல்பட்டு நிவாரணப் பணிகளை மேற்கொண்டு. மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்கி மக்களைப் பாதுகாத்துள்ளனர் என்பதை நினைவுபடுத்த வேண்டியுள்ளது,

பொதுமக்களிடம் தேவையற்ற வதந்திகளை பரப்பி, அதன் மூலம் வெற்று விளம்பரத்தை தேடுவதைவிட மக்களுடன் மக்களாக நின்று உதவி செய்வதே சிறந்த மக்கள் தொண்டாகும். அவசர காலங்களில் குற்றச்சாட்டுகளை கூறுவதை விட ஒத்துழைப்பு நல்கி உதவி செய்திட வேண்டியது அனைவருக்கும் கடமையாகும்.

இவ்வாறு டி.கே.எஸ்.இளங்கோவன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; பலத்த பாதுகாப்பு உள்ள ஹரித்வார்-ரோஷனாபாத்சிறையிலிருந்து, 11.10.2024 அன்று, கொலைக் குற்றவாளி உள்ளிட்ட இரண்டு கைதிகள் தப்பி ஓடி விட்டார்களாமே ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; அன்று அந்த சிறையில் 'ராம்லீலா' நாடகம் நடந்திருக்கிறது. அதில் வானரங்களாக வேடமிட்ட இருவர் - ஒருவர் பங்கஜ், மற்றொருவர் ராஜ்குமார் - சீதையைத் தேடும் தோரணையில், ஏணியை வைத்து சிறை மதில் சுவர் ஏறிக்குதித்துத் தப்பி ஓடியிருக்கிறார்கள்.**

**ராமாயண வானரங்கள் கடல் தாண்டி இலங்கைக்குள் புகுந்தன என்பது புராணக் கதை !**

**வானர வேடமிட்ட குற்றவாளிகள் சிறைச் சுவர் தாண்டித் தப்பியது இப்போது நடந்த உண்மைக் கதை !**

## திருவாரூரில் முரசொலி செல்வம் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி!

திருவாரூர், அக்.16–

திராவிட இயக்கத்தின் கொள்கைகளை, தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களும் வகுத்த பகுத்தறிவு சிந்தனை களை தனக்கே உரிய பாணியில், எளிய நடையில் மக்களிடம் கொண்டுசேர்த்த பெருமைக்குரியவர் முரசொலியின் ஆசிரியராக இருந்த மரியாதைக்குரிய முரசொலி செல்வம் அவர்கள். அன்னாரது மறைவு செய்தி அறிந்து தமிழ் கூறும் நல்லுலகமே அதிர்ச்சி அடைந்திருந்தனர்.

திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அவர்களின் தலைமையில், சென்னை கோபாலபுரத்தில் வைக்கப்பட்டிருந்த முரசொலி செல்வம்அவர்களின் உடலுக்கு மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் உள்ளிட்டோரும் நேரடியாக அஞ்சலி செலுத்தினார்.

மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., ஆலோசனைகளின்படி, திருவாரூர் மாவட்ட முழுவதிலும் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் வார்டு கழகங்களில் கழகத்தினர் முரசொலி செல்வம் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தி, தலைமைக் கழக வேண்டுகோளின் படி கழக கொடியினை அரைக்கம்பத்தில் பறக்கசெய்த்து துக்கம் அனுசரித்தனர்.

திருவாரூர் நகரகழக அலுவலகம் எதிரே மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகளுடன் முரசொலி செல்வம் அவர்களின் உருவப்படத் திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதையை செலுத்தினார்.

மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாநில மாணவரணி துணை செயலாளர் மன்னை. த. சோழராஜன், மாநில விவசாய தொழலாளர் அணி துணை செயலாளர் இரா.சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஞானசேகரன், ஆர். எஸ்.பாண்டியன், ப.ஆடலரசன், கோ.செல்வம் மற்றும் டி.செந்தில், செல்வ.ஜெயதேவன், ஆர். முருகேசன் உள்ளிட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் அந்தந்த பகுதிகளில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், மு.வெங்கடேசன், ஒன்றிய செயலாளர்கள் வீ. அன்பரசன், கோ.தெட்சிணாமூர்த்தி, ஆர். பாலச்சந்திரன், சேகர்.கலியபெருமாள், எஸ்.ஜோதிராமன், ப.பிரபாகரன், நா.கவியரசு, கே.வி.கே. ஆனந்த், டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, ஐ.வி.குமரேசன், வீ.எஸ். ஆர். தேவதாஸ், பால.ஞானவேல், இரா.மனோகரன், ப.பிரகாஷ், புலிவலம் ஏ.தேவா, வே. மனோகரன், கேப்டன் செல்வராஜ், நகர செயலாளர்கள் வீரா.கணேசன், ஆர்.எஸ்.பாண்டியன், வாரை.எஸ்.பிரகாஷ், எம்.எஸ். கார்த்திக், கூத்தா நல்லூர் பக்கிரிசாமி, ஆர்.ராஜசேகர், பா.சிவநேசன், ஏ.கே.டி.சேரன், நன்னிலம் பக்கிரிசாமி,பேரளம் தியாகு பூண்டி. கே. கலைவேந்தன் உள்ளிட்டோர் தலைமையிலும், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் நா.இளையராஜா மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பனங்குடி ஏ. எஸ்.குமார் மற்றும் இளைஞரணி உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் தலைமையிலும், ஒன்றியக்குழு தலைவர்கள் சோம.செந்தமிழ் செல்வன், உமாப்ரியா, நகர்மன்ற தலைவர்கள் மன்னை. த. சோழராஜன் புவனப்ரியா செந்தில், கவிதா பாண்டியன், பாத்திமா பஷீரா,மும்தாஜ் நவாஸ்கான், மகா லெட்சுமிமுருகேசன், முருகேசன் பக்கிரிசாமி உள்ளிட்டோர் தலைமையிலும் மறைந்த முரசொலி செல்வம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த அஞ்சலி நிகழ்வுகளில் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பத்திரிகையாளர்கள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் பங்கேற்று மறைந்த முரசொலி செல்வம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

### முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் பிறந்த நாள்:


# இளைஞர்கள் அவருக்குப் பெருமை சேர்த்திட வேண்டும் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, அக். 16–

முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி. ஜெ.அப்துல்கலாம் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் "கல்வியின் துணைக்கொண்டு, அறிவிற் சிறந்து விளங்கி நமது இளைஞர்கள் அவருக்குப் பெருமை சேர்த்திட வேண்டும்" என்று கூறியுள்ளார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–



**கல்வியும், நெஞ்சில் கனவும், அதை நனவாக்கத் தேவையான கடும் உழைப்பும் இருந்தால் உயர்வு நம்மைத் தேடி வரும் என்ற ஊக்கத்தை இளைஞர்களிடம் விதைத்த நமது முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் அவர்களின் பிறந்தநாள் இன்று!**

**நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற பின், அப்துல் கலாம் அவர்களுக்கு அவர் பயின்று பயிற்றுவித்த அண்ணா பல்கலைக்கழகத்தில் சிலை அமைக்கப்படும் என்று அறிவித்து, கடந்த ஆண்டு திறந்து வைத்தோம்.**

**அறிவியல் வளர்ச்சி, மனிதவியல் மற்றும் மாணவர் நலன் ஆகியவற்றுக்குப் பாடுபடும் தமிழர்களுக்கு, ஆண்டுதோறும் விடுதலை நாளில் "Dr. A.P.J. அப்துல் கலாம் விருது" வழங்கி வருகிறோம்.**

**நமது இளைஞர்கள் காணும் கனவுகள் மெய்ப்படத்தான் "நான் முதல்வன்" உள்ளிட்ட திட்டங்களை நமது திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது.**

**கல்வியின் துணைக்கொண்டு அறிவிற் சிறந்து விளங்கி, நமது இளைஞர்கள் அவருக்குப் பெருமை சேர்த்திட வேண்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

